தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.08.2013**

**தமிழகத்தில்தான் ரூ.4,900 கோடிக்கு உணவு மானியம்**



இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் ரூ.4,900 கோடிக்கு உணவு மானியம் வழங்கப்படுவதாகவும், மத்திய அரசின் திட்டத்துக்கே மானியம் வழங்குவதாகவும் உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் க. நந்தகுமார் தலைமை வகித்தார். கைத்தறித் துறை அமைச்சர் எஸ். சுந்தரராஜ் முன்னிலை வகித்தார்.

ஆய்வுக் கூட்டத்திற்கு பின்னர் அமைச்சர் ஆர். காமராஜ் தெரிவித்தாவது:

ஜூன் 1 ஆம் தேதி முதல் 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் கடைகள் மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் 3.16 லட்சம் மெட்ரிக். டன் தரமான அரிசி விலையில்லாமல் விநியோகம் செய்யப்படுகிறது.

ஒரு கிலோ அரிசி ரூ.20க்கு வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 33,200 குவிண்டால் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. காய்கறி விலையைக் கட்டுப்படுத்த சென்னை மாநகரில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளைத் துவக்கி தரமான,

புதிய காய்கறிகள் குறைந்த விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் ரூ.4,900 கோடி உணவு மானியமாக வழங்கப்படுகிறது. மத்திய அரசின் ஏஏஒய் திட்டத்தின் கீழ் ரூ.18.97 லட்சம் ரேஷன் கார்டுதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ வீதம் அரிசி விலையில்லாமல் வழங்கப்படுவதால், மாநில அரசுக்கு ஆண்டுக்கு ரூ.216 கோடி செலவாகிறது.

இதன் மூலம் மத்திய அரசின் திட்டத்துக்கே மானியம் வழங்கும் ஒரே அரசு தமிழக அரசாகத்தான் இருக்கும். ஆனால், முதல்வரின் கோரிக்கைகளை மத்திய அரசு கருத்தில் கொள்வதே இல்லை.

தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்கி வந்த 59,780 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு 52,806 கிலோ லிட்டராகக் குறைத்துவிட்டது. தற்போது 20,906 கிலோ லிட்டர் மட்டுமே ஒதுக்கீடு செய்கிறது. தமிழகத்தின் முழுத் தேவையான 65,140 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமரை தொடர்ந்து முதல்வர் வற்புறுத்தி வருகிறார்.

உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் 19,515 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 11,868 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 426 பேர் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றார் அமைச்சர் ஆர். காமராஜ்.

முன்னதாக, மண்டபத்தில் உள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் வைப்பறை, பிரப்பன்வலசை ரேஷன் கடை, ராமநாதபுரத்தில் உள்ள மண்ணெண்ணெய்

விற்பனை நிலையம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு ஆகியவற்றையும் அமைச்சர் காமராஜ் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

உணவுப் பொருள் வழங்கல் துறையின் முதன்மைச் செயலர் ஸ்வரண்சிங், நுகர்வோர் கூட்டுறவு சங்கக் கூடுதல் பதிவாளர் கலையரசி, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை ஏ.டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன், சேமிப்புக் கிடங்கு வாரியத் தலைவர் ஜி. முனியசாமி, எம்.எல்.ஏ. முருகன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு. சுந்தரபாண்டியன் உள்பட பலர் ஆய்வின்போது உடன் வந்திருந்தனர்.

**முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் 134 அடியை எட்டியது**

முல்லைப் பெரியாறு அணையில் தொடர்ந்து நீர்மட்டம் 134 அடியை தாண்டி வருவதால், முதல்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கையை கேரள அரசு செவ்வாய்க்கிழமை விடுத்தது.

அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 152 அடி வரை தண்ணீரைத் தேக்கும் திறன் இந்த அணைக்கு இருந்தாலும், 1979 ஆம் ஆண்டிலிருந்து அணைக்கு பலம் இல்லையென்ற கேரள அரசின் தொடர் வாதத்தால், 136 அடி வரை மட்டுமே தண்ணீரைத் தேக்கும் நிலை இருந்து வருகிறது.

136 அடிக்கு மேல் நீர்மட்டம் உயரும்போது, அணையிலிருந்து எப்போதும் திறந்தே இருக்கும் 13 மதகுகளின் வழியாக நீர் வெளியேறும். இந்த நீரானது, கேரளப் பகுதி வல்லக்கடவு வழியாக இடுக்கி அணைக்கு உபரியாகச் சென்று அரபிக் கடலில் வீணாகக் கலந்துவிடும்.

இந்தாண்டு முல்லைப் பெரியாறு அணையிலிருந்து கூடுதலாகத் தண்ணீர் திறந்து விடப்பட்டு, வைகை அணையில் தேக்கி வருவதோடு, வைகை அணையிலிருந்தும் மதுரை, மேலூர் பகுதிகளின் முதல் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.

இதனிடையே, செவ்வாய்க்கிழமை முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 134 அடியை எட்டியது. இதுதொடர்பாக, தமிழக பொதுப்பணித் துறை கேரள அரசுக்கும், தமிழக அரசுக்கும் தகவல் தெரிவித்தது. தொடர்ந்து அணைக்கு விநாடிக்கு 4,560 கனஅடி நீர் வரத்து உள்ளது. இங்கிருந்து வைகை அணைக்கு விநாடிக்கு அதிகபட்சமாக 2,100 கன அடி தண்ணீர் பாசனத்துக்கும், குடிநீருக்கும் திறந்து விடப்படுகிறது.

இதையொட்டி, இடுக்கி மாவட்ட ஆட்சியர் அஜித்குமார் பாட்டீல் பகவத்ராவ், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து இடுக்கி அணை வரை உள்ள வல்லக்கடவு, வண்டிப் பெரியாறு, தேங்கக்கல், ஐயப்பன் கோயில் உள்ளிட்ட பகுதிகளுக்கு முதல் கட்ட அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**பாபநாசம், சேர்வலாறு அணை நீர்மட்டம் மேலும் உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 நாளில் 10 அடி உயர்ந்து செவ்வாய்க்கிழமை 138.45 அடியாக இருந்தது. பாபநாசம் அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை நீடிப்பதால் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 3,038.87 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 128.85 அடியாக உள்ளது. அணையிலிருந்து 1,500 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 5.25 அடி உயர்ந்து 138.45 அடியாக இருந்தது.

மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 65.83 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 113 கனஅடி நீர்வரத்து வந்து கொண்டிருந்தது. அணையில் பெருங்கால் பாசனத்துக்கு 55 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

கடனாநதி அணை நீர்மட்டம் 81 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 260 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணைக்கு வந்து கொண்டிருந்த 260 கனஅடியும் ஆற்றில் திறந்து விடப்பட்டது. ராமநதி அணை நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 79.25 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 165 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து பாசனத்துக்கு 60 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

**தொழில்நுட்பங்களால் கூடுதல் மகசூல் பெறலாம்**

சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெற நவீன வேளாண் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான்.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் ஆவுடையார்கோவிலில் திங்கள்கிழமை நடைபெற்ற கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி முகாமைத் தொடக்கி வைத்து மேலும் அவர் பேசியது:

ஆவுடையார்கோவில், மணமேல்குடி பகுதி விவசாயிகள் தற்போது சாகுபடி செய்யவுள்ள நேரடி நெல் விதைப்பில் வேளாண் துறையினர் அறிவித்துள்ள யோசனைகளையும், நவீன தொழில்நுட்பங்களையும் தவறாது கடைப்பிடித்தால் எதிர்பார்த்ததைவிட கூடுதல் மகசூல் கிடைக்கும். நெற்பயிரில் குலைநோய் தாக்காமல் இருக்க, தேவையான தடுப்பு நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதையடுத்து, குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன், ஆவுடையார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் என். அடைக்கப்பன், வேளாண் அலுவலர் எஸ். ராதாகிருஷ்ணன், உதவி விதை அலுவலர் எஸ். நடராஜன் ஆகியோர் பயிற்சியளித்தனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விதை நோ6த்தி மருந்துகள் மானியத்தில் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை உழவர் மன்ற அமைப்பாளர்கள் பாண்டிபத்திரம் தங்கராசு, செம்மானாம்பொட்டல் ராமு ஆகியோர் செய்தனர்.

**திருச்சி, தஞ்சை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் கரூர் மாவட்டம், மாயனூர் பகுதியிலுள்ள புதிய கட்டளை வாய்க்காலிலிருந்து பாசனத்துக்காக செவ்வாய்க்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.**

திருச்சி, தஞ்சை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் கரூர் மாவட்டம், மாயனூர் பகுதியிலுள்ள புதிய கட்டளை வாய்க்காலிலிருந்து பாசனத்துக்காக செவ்வாய்க்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

புதிய கட்டளை வாய்க்கால் பகுதியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறத் துறை அமைச்சர் ஆர். வைத்தியலிங்கம், போக்குவரத்துத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி ஆகியோர் வாய்க்காலிலிருந்து தண்ணீர் திறந்து மலர்தூவினர்.

அணையிலிருந்து 580 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் 11,198 ஏக்கர், 107 குளங்கள் மூலமாக 964 ஏக்கர் என மொத்தம் 20,662 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுகின்றன. தண்ணீர் திறப்பு மூலம் இவ்விரு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தடையில்லாமல் தொடர்ந்து விவசாயம் செய்ய இயலும்.

தொடர்ந்து 137 நாள்களுக்கு இதே அளவில் தண்ணீர் திறந்துவிடப்படும் எனப் பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் அரசுத் தலைமைக் கொறடா ஆர். மனோகரன், மாவட்ட ஆட்சியர்கள் கரூர் ச. ஜெயந்தி, திருச்சி ஜெயஸ்ரீ முரளிதரன், எம்எல்ஏக்கள் குளித்தலை அ. பாப்பாசுந்தரம், கிருஷ்ணராயபுரம் செ. காமராஜ், முசிறி என்.ஆர். சிவபதி,

துறையூர் த. இந்திராகாந்தி, மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் கரூர் கீதா மணிவண்ணன், திருச்சி ராஜாத்தி, ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டப் பொறியாளர் பொதுப்பணித்திலகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்துக்கு ரூ. 38 லட்சம் ஒதுக்கீடு: அரியலூர் ஆட்சியர்**

அரியலூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடியில் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு தொகுப்புத் திட்டத்துக்கு ரூ. 38 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார்.

திருமானூர் ஒன்றியம், கண்டிராதித்தம் ஊராட்சியில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் இலவச இடுபொருள்கள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு எம்எல்ஏ துரைமணிவேல் முன்னிலை வகித்தார். விழாவுக்கு தலைமை வகித்து விவசாயிகளுக்கு இடுபொருள்களை வழங்கி ஆட்சியர் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் தா. பழூர், மற்றும் திருமானூர் ஒன்றிய விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ. 28 கோடியை முதலமைச்சர் வழங்கியுள்ளார். அரியலூர் மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களாக் 195 வருவாய்க் கிராமங்களில் நடைபெற்று வந்த "அம்மா' திட்ட முகாம்களில் 59,800 மனுக்கள் பெறப்பட்டு, 30,000 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 15,000 பயனாளிகளுக்கு ரூ. 2.50 கோயில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறுவை சாகுபடியில் அதிக மகசூல் பெறவும், உற்பத்தி செலவை குறைக்கும் வகையிலும் தமிழக அரசு சிறப்பு தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி அரியலூர் மாவட்டத்துக்கு ரூ. 38.17 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின்படி ஒவ்வொரு ஏக்கருக்கும், 8 பாக்கெட் உயிர் உரம், 5 கிலோ நெல் நுண் சத்து, 1 லிட்டர் உயிரியியல் பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் 200 கிலோ ஜிப்சம் ஆகியவை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், உதவி இயக்குநர் பாபு, கண்டிராதித்தம் ஊராட்சித் தலைவர் தில்லை திருவாசகமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தமிழகத்தில் பரவலாக நல்ல மழைக்கான வாய்ப்பு**

தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் தமிழகத்தில் அதிகரித்துள்ளதால், பரவலாக நல்ல மழை பெய்யக்கூடும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (ஆக.7 முதல் ஆக.9 வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 3 மிமீ முதல் 5 மிமீ வரை மழை பெய்யக்கூடும். காற்றின் திசைவேகம் மணிக்கு 10 கிமீ முதல் 12 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 71.6 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றில் ஈரப்பதம் குறைந்தபட்சம் 52 சதம் முதல் அதிகபட்சம் 80 சதம் வரையும் இருக்கும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கு..: தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் தமிழகத்தில் அதிகரித்துள்ளது. இதனால், மாநிலத்தின் பல பகுதிகளில் நல்ல மழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. சமீபத்தில் பெய்த மழையால் வெப்ப அளவுகள் குறைந்துள்ளது. இருப்பினும், பகல் வெப்பம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

வேளாண் விவசாயிகளுக்கு...:சற்று தீவிரமடைந்துள்ள பருவமழையை பயன்படுத்தி நிலத்தை தயார் செய்திட வேண்டும். 25 மிமீக்கு மேல் மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் ஆடிப்பட்டத்துக்கு ஏற்ற நிலக்கடலை (டிஎம்வி -13), ஆமணக்கு (ஒய்ஆர்சிஎச்-1), சோளம் (கோ-30) மற்றும் துவரை (கோ-7) ஆகிய உயர் விளைச்சல் ரகங்களை தேர்வு செய்து விதைத்திட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொட்டு நீர்ப்பாசனம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

நாமகிரிப்பேட்டை வட்டார விவசாயிகளுக்கு சொட்டுநீர், தெளிப்பு நீர்ப்பாசனம் குறித்து இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. நாமக்கல் மாவட்டம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் உழவர் பயற்சி நிலையத்தின் கீழ், நாமகிரிப்பேட்டை வட்டாரம் கரியாம்பட்டியில் கிராம அடிப்படை பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

இதில், குறைவான நீரில் செயல்படுத்தப்படும் சொட்டுநீர், தெளிப்பு நீர்ப்பாசனத்தில் சாகுபடி செய்யும் முறைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது. தற்போது வறட்சி அதிகம் காணப்படுவதால் ஆங்காங்கே குளம், குட்டை, ஏரி ஆகியவற்றை ஆழப்படுத்தி பெய்யும் மழை நீரை சேகரித்து சாகுபடி செய்வது குறித்தும் அறிவுரை வழங்கப்பட்டது.

பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் மாதேஸ்வரன் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நாமக்கல் மாவட்டத்தில் பலத்த மழை**

நாமக்கல் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்த மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் கால்வாய்ப் பாசனம் அல்லாத மானாவாரி நிலங்களாகவே உள்ளன. மழை மற்றும் நிலத்தடி நீரை நம்பியே விவசாயிகள், விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்தாண்டு பருவமழை பொய்த்தால் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 1000 அடிக்கும் கீழே சென்றது. இதனால், பயிரிடப்பட்டிருந்த பயிர்களும் காய்ந்து கருகின. இந்த ஆண்டும் தென்மேற்குப் பருவமழை காலம் தொடங்கி ஒரு மாதத்துக்கு மேலாகியும் நாமக்கல் மாவட்டத்தில் போதுமான அளவு மழை பெய்யாமல் இருந்து வந்தது. இதனால், விவசாயிகள் பயிர் சாகுபடி செய்ய அச்சத்தில் இருந்து வந்தனர்.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. மாலை 4 மணிக்கு தொடங்கிய மழை 6 மணி வரை நீடித்தது. நாமக்கல் நகர சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதையடுத்து, பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

தவிர, தமிழகத்தில் பரவலாக நல்ல மழை பெய்யும் என்ற வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பால், விவசாயிகள் விதைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்ததுமேட்டூர்/**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை நொடிக்கு 59,506 கன அடியாகக் குறைந்தது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததால், அங்குள்ள அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது. இதையடுத்து, கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீரின் அளவும் குறைக்கப்பட்டது.

ஒகேனக்கல்லுக்கு 75,000 கன அடி நீர்வரத்து: இதைத்தொடர்ந்து ஒகேனக்கல்லுக்கு திங்கள்கிழமை இரவு நொடிக்கு 90 ஆயிரம் கன அடியாக

இருந்த நீர்வரத்து, செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 75 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது.

இதனால், வெள்ளம் கரை புரண்ட பகுதிகளில் பாறைகள் வெளியே தெரிய தொடங்கின.

தடை நீடிப்பு: ஒகேனக்கல்லில் வெள்ளத்தில் பரிசல் ஓட்டிகள் உள்பட 4 பேர் சிக்கி மீட்கப்பட்டதையடுத்து, தண்ணீர் செல்லும் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதை முற்றிலும் தடுக்கும் வகையில் இரண்டாவது நாளாக செவ்வாய்க்கிழமையும் போலீஸார் தடுப்பு ஏற்படுத்தியிருந்தனர்.

அருவிக்குச் செல்லும் பகுதியில் உள்ள கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. மேலும், ஒகேனக்கல் தொடக்கப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் சுற்றுலா வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றன.

பேருந்துகளில் வருவோரும் தடுப்பைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

இதனால், சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாகக் குறைந்தது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 59,506 கன அடி: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை மாலை நொடிக்கு 59,506 கன அடியாகக் குறைந்தது. இதையடுத்து, அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவும் நொடிக்கு 59,182 கன அடியாகக் குறைக்கப்பட்டது.

அணையின் நீர்மட்டம் 121 அடியாகவும், நீர் இருப்பு 95.07 டி.எம்.சி.யாகவும் இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 121 அடியாக உயர்ந்ததால், கொளத்தூர் அருகேயுள்ள பண்ணவாடி பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான வாழைகள், நிலக்கடலைப் பயிர்கள் நீரில் மூழ்கின.

தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால், சேலம் மாவட்டம், கோட்டையூரிலிருந்து தருமபுரி மாவட்டம், ஒட்டனூருக்கும், சேலம் மாவட்டம், பண்ணவாடியிலிருந்து தருமபுரி மாவட்டம், நாகமரைக்கும் படகுப் போக்குவரத்து மூன்றாவது நாளாக நிறுத்தப்பட்டது. இதனால், தருமபுரி மாவட்டம், நெருப்பூரிலுள்ள முத்தையன் கோயிலுக்கு செவ்வாய்க்கிழமை செல்ல முடியாமல் பக்தர்கள் தவித்தனர்.

அந்தப் பகுதியிலிருந்து கொளத்தூர் மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் இரண்டு நாள்களாகப் பள்ளிக்கு வர முடியவில்லை.

காவிரியில் பரிசல் இயக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், மீனவர்கள் ஆற்றுக்குள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்ததுமேட்டூர்/**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை நொடிக்கு 59,506 கன அடியாகக் குறைந்தது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததால், அங்குள்ள அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது. இதையடுத்து, கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீரின் அளவும் குறைக்கப்பட்டது.

ஒகேனக்கல்லுக்கு 75,000 கன அடி நீர்வரத்து: இதைத்தொடர்ந்து ஒகேனக்கல்லுக்கு திங்கள்கிழமை இரவு நொடிக்கு 90 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 75 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது.

இதனால், வெள்ளம் கரை புரண்ட பகுதிகளில் பாறைகள் வெளியே தெரிய தொடங்கின.

தடை நீடிப்பு: ஒகேனக்கல்லில் வெள்ளத்தில் பரிசல் ஓட்டிகள் உள்பட 4 பேர் சிக்கி மீட்கப்பட்டதையடுத்து, தண்ணீர் செல்லும் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள்

செல்வதை முற்றிலும் தடுக்கும் வகையில் இரண்டாவது நாளாக செவ்வாய்க்கிழமையும் போலீஸார் தடுப்பு ஏற்படுத்தியிருந்தனர்.

அருவிக்குச் செல்லும் பகுதியில் உள்ள கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. மேலும், ஒகேனக்கல் தொடக்கப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் சுற்றுலா வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றன.

பேருந்துகளில் வருவோரும் தடுப்பைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

இதனால், சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாகக் குறைந்தது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 59,506 கன அடி: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை மாலை நொடிக்கு 59,506 கன அடியாகக் குறைந்தது. இதையடுத்து, அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவும் நொடிக்கு 59,182 கன அடியாகக் குறைக்கப்பட்டது.

அணையின் நீர்மட்டம் 121 அடியாகவும், நீர் இருப்பு 95.07 டி.எம்.சி.யாகவும் இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 121 அடியாக உயர்ந்ததால், கொளத்தூர் அருகேயுள்ள பண்ணவாடி பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான வாழைகள், நிலக்கடலைப் பயிர்கள் நீரில் மூழ்கின.

தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால், சேலம் மாவட்டம், கோட்டையூரிலிருந்து தருமபுரி மாவட்டம், ஒட்டனூருக்கும், சேலம் மாவட்டம், பண்ணவாடியிலிருந்து தருமபுரி மாவட்டம், நாகமரைக்கும் படகுப் போக்குவரத்து மூன்றாவது நாளாக நிறுத்தப்பட்டது. இதனால், தருமபுரி மாவட்டம், நெருப்பூரிலுள்ள முத்தையன் கோயிலுக்கு செவ்வாய்க்கிழமை செல்ல முடியாமல் பக்தர்கள் தவித்தனர்.

அந்தப் பகுதியிலிருந்து கொளத்தூர் மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் இரண்டு நாள்களாகப் பள்ளிக்கு வர முடியவில்லை.

காவிரியில் பரிசல் இயக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், மீனவர்கள் ஆற்றுக்குள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

**தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'**

நீலகிரி மாவட்டத்தில் தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அரச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம், தமிழக அரசுடன் இணைந்து 12-ஆவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ், மத்திய அரசின் திட்டமான தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

உணவுப் பதப்படுத்துவதன் மூலமாக உற்பத்தியை பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதை வலியுறுத்துவதும், மத்திய அரசின் வேளாண் திட்டங்களுக்கும், உணவுப் பதப்படுத்தும் தொழில் பிரிவின் வளர்ச்சிக்கு உதவுவதும் இதன் நோக்கம்.

மேலும், மாநில அரசு நிறுவனங்களுக்கும், மதிப்பு கூடுதலுக்கான உள் கட்டமைப்புகளுக்கும் உள்ள இடைவெளியை குறைப்பதன் மூலமாக வேளாண் விளைப் பொருள்களின் தேவையை அதிகரிக்கவும், அறுவடை பின் செய் தொழில்நுட்ப மேலாண்மை மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழில்களில் தொழில் முனைவோருக்கு பயிற்சியளித்து அவர்களது தரத்தை மேம்படுத்தவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் தரத்திற்கேற்ப உணவுப் பாதுகாப்புச் சட்டம் வகுப்பதும் இந்த இயக்கத்தின் குறிக்கோளாகும்.

இந்த இயக்கத்தின்கீழ் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தில் 25 சதவீதமும், அதிகபட்சமாக ரூ.50 லட்சம் மானியமாகவும், குளிர்சாதன வசதி அமைப்பதற்கு 35

சதவீத மானியமும், அதிகபட்சமாக ரூ.5 கோடியும், மனிதவள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.1 கோடியும் மானியமாக வழங்கப்படும். தொழில் முனைவோர் பயிற்சியளிக்க ரூ.3 லட்சம் மானியமாக வழங்கப்படும்.

அதேபோல, உணவுப் பதப்படுத்தும் பயிற்சிக்காக ரூ.6 லட்சமும், பல் பொருள் பயிற்சிக்கு ரூ.15 லட்சம் வழங்கப்படும். முதன்மைப் பதப்படுத்தும் நிலையம், விளைப் பொருள் சேகரிப்பு நிலையம் துவங்குவதற்கு திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதமும், அதிகபட்சமாக ரூ.5 லட்சமும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் சுயஉதவிக் குழு, அரசு சாரா நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் மானியம் வழங்கப்படும். குளிரூட்டப்பட்ட வாகனம் வாங்குவதற்கு திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதமும், அதிகபட்சமாக ரூ.50 லட்சமும் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலமாக தொழில் முனைவோர், விவசாயிகள் தொழில் முனைவோர் குழுமம், சுய உதவிக்குழு, அரசு சாரா நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் மானியம் வழங்கப்படும்.

இந்தத் திட்டங்கள் மத்திய அரசின் உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தின் மூலமாக செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்களாகும்.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதால், 12-ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் வழிமுறைகளின்படி, மானியம் கோரும் அனைத்து புதிய விண்ணப்பங்களை நீலகிரி மாவட்டத்திலுள்ள வேளாண் வணிக துணை இயக்குநருக்கு அனுப்ப உத்தரவிட்டுள்ளதால், இதுதொடர்பான கூடுதல் விவரங்களை வேளாண் துணை இயக்குநரை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

உத்தரமேரூர் பேரூராட்சியில் செவ்வாய்க்கிழமை மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரூராட்சித் தலைவர் சுமதி குணசீலன் தலைமை தாங்கி பேரணியை துவக்கிவைத்தார்.

துணைத் தலைவர் இ.தயாளன் முன்னிலை வகித்தார்.

பேரூராட்சி செயல் அலுவலர் எஸ்.ஆரோக்கியதாஸ் வரவேற்றார்.

பள்ளி மாணவ, மாணவியர்கள் மழைநீர் சேகரிப்பு அவசியம் பற்றி துண்டுப் பிரசுரம் வழங்கி பிரசாரம் மேற்கொண்டனர்.

இளநிலை உதவியாளர் மே.ச.வெ. ஆனந்தசயனம் நன்றி கூறினார்.

காஞ்சிபுரத்தில்...

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் பேரூராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் ஊர்லவத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான பதாகைகளை மாணவர்கள் ஏந்திச் சென்றனர்.

ஊர்வலம் பஸ் நிலையத்தில் தொடங்கி, ராஜவீதி, மார்க்கெட், வி.வி. கோயில்தெரு உள்ளிட்ட முக்கிய வீதிகள் வழியாக மீண்டும் பஸ் நிலையத்தில் ஊர்வலம் முடிந்தது.

இந்த ஊர்வலத்தில் உத்தரமேரூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் வாலாஜாபாத் பா.கணேசன், பேரூராட்சிகள் உதவி இயக்குநர் செல்வம், பேரூராட்சி செயல் அலுவலர் முனியாண்டி, ஒன்றியக் குழுத் தலைவர்

வரதராஜுலு, பேரூராட்சித் தலைவர் நாகராஜன், துணைத் தலைவர் கோவிந்தம்மாள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அச்சிறுபாக்கம்: அச்சிறுபாக்கம் பேரூராட்சி சார்பில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தை பேரூராட்சித் தலைவர் தாவூத்பீ உஷேன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் பள்ளி மாணவர்கள், மழைநீர் சேகரிப்பு பதாகைகளுடன் வந்தனர். ஊர்வலம் பஜார் வீதி, 4 மாட வீதிகள் மற்றும் நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது.

இதில் துணைத் தலைவர் சீனிவாசன், செயல் அலுவலர் கேசவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விருத்தாசலத்தில் 64 மி.மீ. மழை**

கடலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

அதிகபட்சமாக விருத்தாசலத்தில் 64 மில்லி மீட்டர் பதிவாகியது.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக விருத்தாசலத்தில் 64 மில்லி மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக கடலூரில் 1.20 மில்லி மீட்டர் மழையும் பதிவானது. சராசரியாக 22.02 மில்லி மீட்டர் மழை பெய்தது.

மாவட்டத்தின் பிற இடங்களில் பெய்துள்ள மழை அளவு விவரம்: (மில்லி மீட்டரில்)பரங்கிப்பேட்டை 61, சேத்தியாத்தோப்பு 59, புவனகிரி 36, லால்பேட்டை 30, காட்டுமன்னார்கோவில் 27, தொழுதூர் 24, ஸ்ரீமுஷ்ணம் 22, சிதம்பரம் 19, கொத்தவாச்சேரி 18, வேப்பூர் 17, காட்டுமயிலூர் 12, பெலாந்துறை 12, கீழ்செருவாய் 12, அண்ணாமலைநகர் 11.20, பண்ருட்டி 7.40, வானமாதேவி 5.6.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.08.2013**

## வாழப்பாடி பகுதியில் கடும் வறட்சியால் பந்தல் சாகுபடிக்கு மாறிய விவசாயிகள்

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், திராட்சை தோட்டம்போல் பந்தல் அமைத்து, புடலை, பீர்க்கன், அவரை, பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வாழப்பாடி பகுதியில், இரு ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்து போனதால், கடும் வறட்சி நிலவி வருகிறது. அப்பகுதி மக்களுக்கு, முக்கிய நீர் ஆதாரமான அருநூற்றுமலையில் உற்பத்தியாகும் வசிஷ்டநதி, கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் வெள்ளாறும் வறண்டு கிடக்கின்றன.

நீர்வரத்தின்றி, பாப்பநாயக்கன்பட்டி கரியகோவில் அணை, புழுதிக்குட்டை ஆணைமடுவு அணையின் நீர்மட்டமும், அடியோடு குறைந்து போனது. விவசாய கிணறு, ஃபோர்வெல்களும் வறண்டு போனதால், பாசனத்துக்கு வழியின்றி, விவசாயிகள் தவித்து வருகின்றனர். நீண்டகால பலன் தரும் ஏராளமான பாக்கு, தென்னை மரங்கள் காய்ந்து, கருகி வருகின்றன.

இந்நிலையில், சேலம் மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை வாயிலாக, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், வாழப்பாடி அடுத்த பெத்தநாயக்கன்பாளையம் பஞ்சாயத்து யூனியன் கிராமங்களில், அரசு மானியத்துடன், திராட்சை தோட்டம்போல், விளை நிலங்களில் பந்தல் அமைத்து, காய்கறிகள் உற்பத்தி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஓரளவு பாசன வசதி கொண்ட காய்கறி உற்பத்தியில் ஆர்வமுள்ள

விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை, அரசு மானியம் வழங்கி, தோட்டக்கலைத்துறை, பந்தல் காய்கறி சாகுபடிக்கு ஊக்குவித்து வருகிறது.

அதனால், வாழப்பாடி அடுத்த குமாரபாளையம், கொட்டவாடி, இடையப்பட்டி கிராமங்களில், பீர்க்கன், புடலை, பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகளை பந்தல் அமைத்து, விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

குமாரபாளையத்தில் பந்தல் காய்கறி சாகுபடி செய்யம் விவசாயிகள் கூறியதாவது: தினந்தோறும் வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, அத்தியாவசிய பொருளான காய்கறியை உற்பத்தி செய்வதால், கணிசமான வருவாயும் கிடைத்து வருகிறது. அதனால், திராட்சை தோட்டம்போல், நவீன முறையில் பந்தல் அமைத்து, காய்கறிகளை சாகுபடி செய்து வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஏமாற்றிய பருவ மழையால் கை கொடுக்காத ஆடிப்பட்டம்

தர்மபுரி: தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால், ஆடிப்பட்டத்தில் சாகுபடிகளை துவங்க முடியாததால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில் முக்கிய பயிர்களாக மா, நெல், கரும்பு, மஞ்சள் மரவள்ளி கிழங்கு, பருத்தி, துவரை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக மாவட்டத்தில் ஆண்டு தோறும் விவசாயிகள் ஆடிப் பட்டத்தில் இறவை மற்றும் மானாவாரி சாகுபடியை துவங்குவது வழக்கம். கடந்த ஆண்டு மாவட்டத்தில் போதிய தென்மேற்கு பருவமழையில்லாதாதல் விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் எதிர்பார்த்த அளவு சாகுபடி பணிகளை துவங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

மேலும் வட கிழக்கு பருவமழையும் மாவட்டத்தில் போதிய அளவு பெய்யாததால்

ஏற்பட்ட வறட்சியின் காரணமாக மாவட்டத்தில் அணைகள் மற்றும் ஏரி, குளங்களில் மற்றும் விவசாய கிணறுகளில் நீர்மட்டம் கேள்வி குறியானது. இதனால் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த, மா, கரும்பு, மஞ்சள், மரவள்ளி கிழங்கு, பருத்தி, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டதால், விவசாயிகள் பெரும் இழப்பை சந்திக்க நேரிட்டது.

இந்நிலையில் மாவட்டத்தில் இந்தாண்டு கோடை இறுதியில் பெய்த மழையை அடுத்து பல விவசாயிகள் ஆனி பட்டத்தில் மானாவாரியாக சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள், மரவள்ளி கிழங்கு, துவரை, 'ரியகாந்தி, பருத்தி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்தனர்.

ஆனால் பருவ மழை தொடர்ந்து ஏமாற்றுவதால் இப்பயிர்கள் சருகாகி வருவதைகண்டு விவசாயிகள் கவலை அடைந்தனர். இருந்த போதிலும் விவசாயிகள் தென்மேற்கு பருவமழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் ஆடிப்பெருக்கன்று பயிர்களை நடவு செய்ய விவசாயிகள் தங்களது நிலங்களை தயார் படுத்தி வைத்தனர்.

அவர்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாக தென்மேற்கு பருவமழை தொடர் விவசாயிகளை ஏமாற்றியது. இதனால் விரக்தி அடைந்த பெரும்பாலான விவசாயிகள் ஆடிப்பெருக்கன்று சாகுபடி பணிகளை துவங்கவில்லை.

ஆடி மாதம் முடிய, ஒன்பது நாட்களே உள்ள நிலையில் தொடர்ந்து பருவமழை ஏமாற்றி வருகிறது. ஆடிப்பட்டம் கை கொடுக்காததால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

### ரூ.45 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட

நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயிகள், சாகுபடி செய்துள்ள மஞ்சளை அறுவடை செய்து, ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.

தலா, 65 கிலோ கொண்ட 1,236 மூட்டைகள் விற்பனைக்கு குவிக்கப்பட்டது. அதில், விரலி ரகம் குவிண்டாலுக்கு அதிக பட்சம் ஒரு மூட்டை, 7,000 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 5,940 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் அதிக பட்சம், 6,000 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 4,850 ரூபாய்கும் விற்பனை செய்யப்பட்டது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 13 ஆயிரத்து, 29 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 8,669 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,236 மூட்டைகள், 45 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

## துவரை சாகுபடிக்கு 50% மானியம் வேளாண் உதவி இயக்குனர் அறிவிப்பு

நாமக்கல்: "தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், துவரை நாற்றங்கால் அமைத்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது' என, எருமப்பட்டி வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நாமக்கல் அடுத்த, எருமப்பட்டி வட்டாரத்தில், துவரை நாற்றங்கால் அமைத்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, தேசிய வேளாண் வளர்ச்சித் திடட்டத்தில், 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. துவரை சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கிலும், மகசூலை அதிகப்படுத்தும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளிடையே துவரை சாகுபடியை ஊக்குவிக்க, நாற்றங்கால் முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மதிப்பிலான இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. ஒரு ஹெக்டேர்

பயிரிட, 2.5 கிலோ விதை போதுமானது.

ஒரு கிலோ விதைக்கு, நான்கு கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்வதன் மூலம், வாடல் நோயை கட்டுப்படுத்தலாம். நாற்றங்கால் தயார் செய்திட ஆறுக்கு நான்கு அளவுள்ள பாலிதீன் பைகளில் மணல் குப்பை மற்றும் செம்மண் ஆகியவற்றை, ஒன்று: ஒன்று: ஒன்று என்ற விகிதத்தில் கலந்து பைகளில் நிரப்பி, ஒரு பைக்கு, இரண்டு விதைகள் வீதம் நடவு செய்தல் வேண்டும்.

தொடர்ந்து, பூவாளி மூலம் தண்ணீர் தெளித்தல் வேண்டும். ஒரு மாதம் கழித்து ஆறுக்கு, மூன்று அடி இடைவெளியில் நடவு வயலில் நடவு செயய்தல் வேண்டும். 60 நாட்கள் கழித்து நுனிகிள்ளுவதன் மூலம், பக்க கிளைகளை அதிகப்படுத்தலாம். மேலும், பூக்களை அதிகப்படுத்த நட்ட, 30 மற்றும் 45வது நாட்களில், இரண்டு சதவீதம் "டிஏபி' கரைசல் அல்லது "டிஎன்ஏயு பல்செஸ் ஒண்டர்' என்ற பயிர் ஊக்கியை தெளித்தல் வேண்டும்.

காய்ப்புழுக்களை கட்டுப்படுத்த தேவைக்கேற்ப, "இன்டக்ஸோகார்ப்' என்ற மருந்தை ஹெக்டேருக்கு, 400 மி.லி., தெளித்து கட்டுப்படுத்தலாம். துவரை சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள், அப்பகுதி உதவி வேளாண் அலுவலரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மேட்டூரில் கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

மேட்டூர்: கடந்த ஒரு ஆண்டாக மேட்டூர் சுற்றுப்பகுதியில் கடும் வறட்சி நீடித்தது. அவ்வப்போது கார்மேகங்கள் திரண்ட போதிலும், காற்று பலமாக வீசியதால் மழை பொழியாமல் ஏமாற்றியது, மேட்டூர் பொதுமக்களை வேதனையில் ஆழ்த்தியது. மேட்டூர் அணை நிரம்பிய நிலையில், மூன்று நாட்களாக மேட்டூர் சுற்று பகுதியில் அவ்வப்போது கனமழை பெய்தது. கடந்த, 4ம் தேதி இரவு மேட்டூரில், 20 மி.மீ., மழை, நேற்று முன்தினம், 2 மி.மீ., மழை பதிவானது.

நேற்று மாலையிலும் ஒரு மணிநேரம் பலத்த மழை பெய்தது. கனமழை பெய்வது விவசாயிகள், பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

### மேட்டூர் அணை நீர்வரத்து திடீர் சரிவு நீர்திறப்பு 59,207 கனஅடியாக குறைப்பு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று மதியம் வினாடிக்கு, 59,531 கனஅடியாக சரிந்தது. நீர்வரத்து, 60 சதவீதம் சரிந்ததால், நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 59,207 கனஅடியாக குறைக்கப்பட்டது.

கர்நாடகா அணைகளில் திறக்கப்படும் உபரிநீர் தொடர்ச்சியாக வந்ததால் கடந்த, 4ம் தேதி இரவு, 9 மணிக்கு, மேட்டூர் அணை முழு கொள்ளளவான, 120 அடியை எட்டியது. அணையில் இருந்து முதல்கட்டமாக வினாடிக்கு, 70,000 கனஅடி நீர் திறந்ததால் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் வினாடிக்கு, 1.31 லட்சம் கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று மதியம் வினாடிக்கு, 59.530 கனஅடியாக திடீரென சரிந்தது. அதற்கேற்ப நேற்று முன்தினம் வினாடிக்கு, 1.22 லட்சம் கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 59,207 கனஅடியாக குறைக்கப்பட்டது.

அணை, 16 கண் மதகு வழியாக வினாடிக்கு, 36,036 கனஅடி நீரும், மீதமுள்ள நீர் அணை மற்றும் சுரங்க மின்நிலையம் வழியாக வெளியேற்றப்பட்டது. அணை உபரி நீர்திறப்பு ஒரே நாளில், 60 சதவீதம் குறைந்ததால் நேற்று முன்தினம் காவிரி வெள்ளம் மூழ்கடித்ததால் துண்டிக்கப்பட்ட மேட்டூர்-பூலாம்பட்டி ரோட்டில் தண்ணீர் வடிந்ததால் போக்குவரத்து சீரடைந்தது.

பயணிகள் பஸ், இரு சக்கர வாகனங்கள், கார்கள் சாலை வழியாக செல்ல துவங்கியது. ஆனால், அதிக எடை கொண்ட சாம்பல் லாரி கடந்து செல்லும் போது, நீர்தேங்கி நின்ற ரோடு சேதமாகும். இதனால், ரோட்டின் தரத்தை ஆய்வு செய்து, அதன் பின்பே சாம்பல் லாரிகளை அனுமதிக்க நெடுஞ்சாலைத்துறையினர்

முடிவு செய்துள்ளனர். இதனால், இரண்டாவது நாளாக தெர்மலில் நிலக்கரி சாம்பல் தேக்கம் அடைந்தது. நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 121 அடியாகவும், நீர் இருப்பு, 95.070 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. மேட்டூர் அணை உபரி நீர் திறப்பு குறைந்த போதிலும், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடையும் பட்சத்தில், மீண்டும் மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## வாழப்பாடி பகுதியில் கடும் வறட்சியால் பந்தல் சாகுபடிக்கு மாறிய விவசாயிகள்

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், திராட்சை தோட்டம்போல் பந்தல் அமைத்து, புடலை, பீர்க்கன், அவரை, பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வாழப்பாடி பகுதியில், இரு ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்து போனதால், கடும் வறட்சி நிலவி வருகிறது. அப்பகுதி மக்களுக்கு, முக்கிய நீர் ஆதாரமான அருநூற்றுமலையில் உற்பத்தியாகும் வசிஷ்டநதி, கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் வெள்ளாறும் வறண்டு கிடக்கின்றன.

நீர்வரத்தின்றி, பாப்பநாயக்கன்பட்டி கரியகோவில் அணை, புழுதிக்குட்டை ஆணைமடுவு அணையின் நீர்மட்டமும், அடியோடு குறைந்து போனது. விவசாய கிணறு, ஃபோர்வெல்களும் வறண்டு போனதால், பாசனத்துக்கு வழியின்றி, விவசாயிகள் தவித்து வருகின்றனர். நீண்டகால பலன் தரும் ஏராளமான பாக்கு, தென்னை மரங்கள் காய்ந்து, கருகி வருகின்றன.

இந்நிலையில், சேலம் மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை வாயிலாக, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், வாழப்பாடி அடுத்த பெத்தநாயக்கன்பாளையம் பஞ்சாயத்து யூனியன் கிராமங்களில், அரசு மானியத்துடன், திராட்சை தோட்டம்போல், விளை நிலங்களில் பந்தல் அமைத்து, காய்கறிகள் உற்பத்தி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஓரளவு பாசன வசதி கொண்ட காய்கறி உற்பத்தியில் ஆர்வமுள்ள

விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை, அரசு மானியம் வழங்கி, தோட்டக்கலைத்துறை, பந்தல் காய்கறி சாகுபடிக்கு ஊக்குவித்து வருகிறது.

## புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க வேண்டும்'

திருவள்ளூர் : ""புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கு, வேளாண் விஞ்ஞானிகள் அவர்களுக்கு உதவ வேண்டும்'' என, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ராமசாமி தெரிவித்தார்.

திருவள்ளூர் அடுத்த, திருவூர், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில், 7வது அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் அகிலா வரவேற்றார். கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ராமசாமி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

கருத்து பரிமாற்றம்

பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், 8வது மண்டல திட்ட இயக்குனரகத்தை சேர்ந்த சாய்ராம், பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் பொன்னுசாமி ஆகியோர் பங்கேற்று, கருத்து பரிமாற்றம் செய்தனர்.

நிகழ்ச்சியில், துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், ""விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, தங்கள் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை, வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள விஞ்ஞானிகளிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்,'' என்றார்.

மேலும், ""வேளாண் விஞ்ஞானிகள் மாவட்டத்தில் உள்ள மண்ணின் தன்மைக்கு ஏற்ப ஏதேனும் ஓரிரு பயிர்களை ஆய்வு செய்து, அதை விவசாயிகளுக்கு பரிந்துரை

செய்ய வேண்டும். அதற்கு முன்பாக, விஞ்ஞானிகள், தாங்கள் செய்த ஆய்வு குறித்த விஷயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். விவசாயிகளை நேரில் சந்தித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும். திட்டங்களை செயல்படுத்துவது மட்டுமின்றி, அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்," என்றார்.

அறிக்கை சமர்ப்பிப்பு

கூட்டத்தில் பேசிய விவசாயிகள், ""காய்கறிகளை பயிர் செய்ய தரமான விதைகளை வழங்க வேண்டும். சீசன் நேரத்தில் விதைகள் கிடைப்பதில்லை. அதேபோல், நடவு உள்ளிட்ட இயந்திரங்களுக்கு மானியம் வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு கல்லூரி ஒன்றையும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

கூட்டத்தில், முனைவர்கள் மணிமாறன், நிர்மலா தேவி, மஞ்சுளா, சுமதி, ஷீபா, விஜயலதா ஆகியோர், விரிவான அறிக்கையை சமர்ப்பித்தனர்.

## அதிக லாபம் தரும் வெண்டை பயிரிட விவசாயிகளுக்கு ஆலோசனை

பொன்னேரி : அதிக லாபம் தரும் வெண்டை பயிரிட, விவசாயிகளுக்கு ஆலோசனையும், இலவச விதையும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில், பொன்னேரி அடுத்த, சின்னகாவணம் கிராமத்தில், ஆடிப்பட்டம் காய்கறி சாகுபடி முகாம், மீஞ்சூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் எபியுல்லா தலைமையில் நடந்தது.

ஆடிப்பட்டத்தில்...

வேளாண்மை உதவி அலுவலர் தனபாலன் வரவேற்று, மீஞ்சூர் வட்டாரத்தில் தோட்டக்கலை நிறைவேற்றி வரும் திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார்.

உதவி இயக்குனர் எபியுல்லா பேசியதாவது:

விவசாயிகள் அதிக லாபம் தரும் தோட்டக் கலை பயிர்களை பயிரிட ஆர்வம்

காட்ட வேண்டும். ஒவ்வொரு விவசாயியும், தன்னிடம் உள்ள நிலத்தில் ஒரு பகுதியை, தோட்டக்கலை பயிரிருக்கு ஒதுக்க வேண்டும். ஆடிப்பட்டத்தில் வெண்டைக்காய் பயிரிடலாம்.

இது குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் பயிராகும். இதற்கு உழைப்பு மட்டும் இருந்தால் போதும். மூன்று மாதத்திற்கு, ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் முதல், 80 ஆயிரம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம்.

50 சதவீதம் மானியம்

ஆடிப்பட்டத்தில், காய்கறி சாகுபடி செய்ய முன் வரும் விவசாயிகளுக்கு, ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானியத்தில் விதைகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு, அவர் கூறினார்.

மேலும், பல்வேறு காய்கறி சாகுபடியில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்தும், நஞ்சில்லா காய்கறிகளை மக்களுக்கு வழங்குவதற்கு தகுந்தாற்போல் பஞ்சகாவியா மற்றும் பூச்சி விரட்டிகளை தயார் செய்து பயன்படுத்தும் முறை குறித்தும் விரிவாக பேசினார்.

முகாமில், சின்னகாவணம், தேவராஞ்சேரி, மெதூர் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில், இலவச வெண்டை விதைகள் கொடுக்கப்பட்டன.

## பாசனத்துக்கு தண்ணீர் அமைச்சர்கள் திறப்பு

மண்ணச்சநல்லூர்: முக்கொம்பு மேலணையிலிருந்து, பாசனத்திற்காக புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

திருச்சி, தஞ்சை, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த, 42 ஆயிரத்து, 736 ஏக்கர் நிலங்கள் பயனடையும் வகையில், பாசனத்திற்காக புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடும்படி, விவசாயிகள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை

விடுத்திருந்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, முதல்வர் நடப்பாண்டு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து திறந்து விட உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி நேற்று காலை, 10.30 மணிக்கு, முக்கொம்பு மேலணையிலிருந்து அமைச்சர்கள் வைத்திலிங்கம், பூனாட்சி, தலைமை கொறடா மனோகரன், திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ, அரியலூர் கலெக்டர் ரவிக்குமார் ஆகியோர், புள்ளம்பாடி வாய்க்காலுக்கான மதகுகளை திறந்து வைத்தனர்.

இதில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ராஜாத்தி, எம்.எல்.ஏ.,க்கள் சிவபதி, இந்திரா காந்தி, மாவட்ட ஜெ., பேரவை செயலாளர் ராமு, யூனியன் சேர்மன் பரமேஸ்வரி, பஞ்சாயத்து தலைவர்கள் சத்தியநாராயணன், ராஜேந்திரன், பொதுப்பணித்துறை இன்ஜினியர்கள் ஜேம்ஸ் லூர்துசாமி, பாலசுப்பிரமணி, எஸ்.டி.ஓ.,க்கள் சுப்பிரமணி, சிவக்குமார், உதவி இன்ஜினியர்கள் செந்தில்குமார், தியாகராஜன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## ஆறு, வாய்க்காலில் தண்ணீர் திறப்பு: மஞ்சள் பயிரிடும் விவசாயிகள்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் வாய்க்கால் மற்றும் காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால், கரையோற நிலங்களில், மஞ்சளையும், ஊடுபயிராக சோளம், வெங்காயம், ஆட்டுத்தீவனத்துக்காக விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர். ஒரே நிலத்தில் மூன்று வகையான பயிர்கள் பயிரிடுவதால், ஆண்டு முழுவதும் வருவாய் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் எல்.பி.பி., காலிங்கராயன், வரட்டுப்பள்ளம், குண்டேரிபள்ளம் வாய்க்கால்கள், காவிரி ஆற்றின் வலதுகரை பாசனம் மூலம், 2.5 ஏக்கர் நிலங்களில் விவசாயம் மேற்கொள்கின்றனர்.

நெல், மஞ்சள், கரும்பு, வாழை, எண்ணெய் வித்துக்கள், ஊடுபயிராக, சோளம், சின்னவெங்காயம், ஆட்டுத்தீவனம் பயிரிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். நடப்பாண்டு மேட்டூர் ஆணை நிரம்பியும், பவானி சாகர் அணையில் இருந்து

வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துள்ளனர்.

தவிர, அவ்வப்போது நல்ல மழையும் பெய்து வருகிறது. விவசாயிகள் நெல், கரும்பு, மஞ்சள் ஆகியவற்றை பயிரிட்டுள்ளனர். சிலர் இடங்களில் நடப்பாண்டு தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் கிணற்றுப்பாசனம் மூலம், தட்டை பூண்டு செடிகளை பயிரிட்டுள்ளனர்.

இதுகுறித்து, காரணாம்பாளையம் விவசாயி சுப்பிரமணிய கவுண்டர் கூறியதாவது, நடப்பாண்டு பருவமழை கைகொடுக்கும் நம்பிக்கையில் கரும்பு பயிரிடும் முன்பாக தட்டை பூண்டு செடிகளை பயிரிட்டோம். இரண்டு மாதத்தில், டிராக்டர் மூலம் செடிகளை மண்ணில் பதித்து உழவு ஓட்டிய பின், கரும்பு பயிரிட உள்ளோம். காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டதால் வரப்பு அமைத்து, மஞ்சளும், ஊடுபயிராக சோளத்தட்டை, ஆட்டுத்தீவனம், சின்னவெங்காயம் பயிரிட்டுள்ளோம். மஞ்சள், 10 மாதம், அதனிடையே சோளம், 60 நாள், சின்ன வெங்காயம், 90 நாள், ஆட்டுத்தீவன செடி ஆண்டு முழுவதும் தீவனம் கிடைத்துவிடும், சோளம் தட்டை கறவைகளுக்கு தீவனமாகவும், இடைபட்ட காலத்தில் சின்னவெங்காயம் அறுவடை வருமானத்தில் மஞ்சளுக்கு தேவையான உரங்களை வாங்க உதவும் என கலந்து பயிரிடுவதை வழக்கமாக கொண்டுள்ளோம், எனக்கூறினார்.

## குண்டுமல்லி பூ வரத்து அதிகரிப்பு கிலோவுக்கு ரூ.80 விலை சரிவு

ஈரோடு: ஈரோடு, பூ மார்க்கெட்டுக்கு, குண்டுமல்லி பூக்கள் வரத்து அதிகரித்துள்ளதால், கிலோவுக்கு, 80 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது. ஈரோடு நகர்பகுதிக்கு தினமும், மல்லிகை, அரளி, ரோஸ், சம்பங்கி, கோழிக்கொண்டை, சன்னமல்லி ஆகிய பூக்கள், ஒரு டன் அளவுக்கு விற்பனைக்காக வருகிறது. மல்லிகை பூக்கள் அந்தியூர், சத்தியமங்கலம், பண்ணாரி, திண்டுக்கல், சேலம் ஆகிய பகுதிகளில் இருந்து விற்பனைக்கு வருகின்றன.

சிவப்பு அரளி, ரோஸ், சம்பங்கி, கோழிக்கொண்டை, சன்னமல்லி ஆகிய பூக்கள் சேலத்தில் இருந்து விற்பனைக்கு வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் கடும் வறட்சியால், தற்போது, பூக்கள் விளைச்சல் அதிகரித்துள்ளதாலும், பூக்களின் தேவை குறைவாக இருப்பதால், பூக்களின் விலை குறைந்துள்ளது.

தற்போது ஆடிமாதம் என்பதால், திருமணம், கோவில் விஷேசங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் குறைந்துள்ளதால், பூக்களின் வரத்து அதிகரித்தும், வாங்குவோர் எண்ணிக்கை குறைந்துள்ளதால், விலையும் குறைந்துள்ளது.

கடந்த வாரத்தில் விற்கப்பட்ட பூக்களின் விபரமும், நேற்று விற்கப்பட்ட விலை வருமாறு (ஒரு கிலோவுக்கான விலை): குண்டு மல்லிகைப்பூ, 300 ரூபாயில் இருந்து, 220, சிவப்பு அரளி, 200ல் இருந்து, 80, பட்டன் ரோஸ் கட்டு, 100ல் இருந்து, 80, சம்பங்கி, 200ல் இருந்து, 120, சன்னமல்லி, 200ல் இருந்து, 150, முல்லை, 240ல் இருந்து, 200, மரிக்கொழுந்து கட்டு, 25 ரூபாயுக்கும் விற்கப்பட்டது.

நேற்று அமாவாசை என்பதால், பூ மார்க்கெட்டில் பூக்கள் விற்பனை அதிகமாக இருந்தது. வரும் சில நாட்களில் ரம்ஜான் பண்டிகை வருவதால், பூக்களின் விற்பனை தொடர்ந்து அதிகரிக்கும், என பூ வியாபாரிகள் தெரிவித்தனர்

### பாபநாசம் அணை நீர்மட்டம் உயர்வு

விக்கிரமசிங்கபுரம்:பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று மேலும் 1 அடி அதிகரித்து 128.85 அடியானது. நேற்று முன்தினம் பெய்த சாரல் மழை காரணமாக 127.85 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று ஒரு அடி அதிகரித்து 128.85 அடியானது. அணைக்கு விநாடிக்கு 3038.87 கன அடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1500 கன அடிநீர் வெளியேறியது. அணைப்பகுதியில் 5 மி.மீ., கீழணையில் 1 மி.மீ., சேர்வலார் அணைப்பகுதியில் 2 மி.மீ., அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது.

நேற்று காலை நிலவரப்படி சேர்வலார் அணை 138.45 அடியாகவும், மணிமுத்தாறு அணை 65.83 அடியாகவும் இருந்தது.

### விவசாயிகள் கூட்டம்

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. தோட்டக்கலை உதவி இயக்குநர் சேகர் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் உலகுசுந்தரம் முன்னிலை வகித்தார். மானிய திட்டங்கள், சான்று பெற்ற விதைகளை மட்டுமே பயன்படுத்துவது குறித்து வேளாண் அலுவலர் மருதுபாண்டியன் கூறினார். உதவி அலுவலர் ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்

### விவசாயிகளுக்கு இலவச இடுபொருட்கள் வழங்கல்

தஞ்சாவூர்: குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தன் கீழ், விவசாயிகளுக்கு இலவச வேளாண் இடுபொருட்களை எம்.எல்.ஏ., ரங்கசாமி வழங்கினார்.
தஞ்சையில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தில், விவசாயிகளுக்கு இலவச வேளாண்மை இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. இதில், வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் நெடுஞ்செழியன் வரவேற்று பேசினார். இதைத்தொடர்ந்து, 25 விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கருக்கு தேவையான இடுபொருட்கள், எட்டு பாக்கெட் உயிர் உரங்கள், ஐந்து கிலோ நெல் நுண்ணூட்டம், 200 கிலோ ஜிப்சம் ஆகியவற்றை, தஞ்சை எம்.எல்.ஏ., ரங்கசாமி வழங்கினார்.

நிகழ்ச்சியில் திருவையாறு எம்.எல்.ஏ., ரத்தினசாமி, வேளாண்மை இணை இயக்குனர் சேகர், சென்னை வேளாண்மை இயக்குனர் அலுவலக துணை இயக்குனர் பிரபாகரன், தஞ்சை வேளாண்மைத்துறை துணை இயக்குனர்கள் சொக்கலிங்கம், சீனிவாசன், உதவி இயக்குனர் மணிமாறன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## அதிக விலைக்கு உரம் விற்பனை வேளாண் அலுவலர் எச்சரிக்கை

தஞ்சாவூர்: "நிர்ணயித்த விலைக்கு மேல் உரக்கடைகளில் உரம் விற்பனை செய்தால், கடைகளின் உரிமம் ரத்து உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என, தஞ்சை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்துக்கு, ஒரு லட்சத்து, 20 ஆயிரம் ஹெக்டேரில் நடவு பணி துவங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தஞ்சை மாவட்டத்திலுள்ள, 245 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும், 245 தனியார் உர விற்பனை நிலையங்களில் யூரியா உரம், 3,740 மெட்ரிக் டன், டி.ஏ.பி.,உரம், 4,216 மெட்ரிக் டன், பொட்டாஷ், 1,873 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரம், 1,318 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் நடக்கிறது.

தனியார் உர விற்பனை நிலையங்களில் விவசாயிகள் உரங்கள் வாங்கும்போது, உரிய விலைப்பட்டியலை கேட்டு வாங்க வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் பட்டியலில் உரம் பெயர், அளவு, விலை விவரம் அடங்கியிருக்க வேண்டும். இப்பட்டியலில் கையெழுத்திட்டு தான், விவசாயிகள் உரம் வாங்க வேண்டும். உரம் விற்பனையாளர்கள், மொத்தமாக உரம் விற்பனை செய்பவராக இருந்தால், உரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்டு, உரிய ரஷீது வழங்க வேண்டும். நிர்ணயித்த விலைக்கு மேல் அதிகபட்ச விலைக்கு உரத்தை விற்றால், கடைகளின் உரிமம் ரத்து உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.08.2013**

**திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 4,000 கிலோ மகசூல்**

சேதுபாவாசத்திரம்: வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் கூறியிருப்பதாவது:

திருந்திய நெல் சாகுபடி முறையில் தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் மற் றும் வீரிய ஒட்டு ரகங்களை பயன்படுத்த வேண்டும். எந்த ரக விதையானாலும் ஏக்கருக்கு 2 கிலோ விதை மட்டுமே போதுமானது. 40 சதுர மீட்டர் பரப்பில் (1 சென்டு) மேட்டுப்பாத்தி அமைத்து பாலித்தீன் விரிப்புகளை பரப்பி அதன் மீது விதைப்பு சட்டங்களை வைத்து மண் மற்றும் இயற்கை எருக்களை இட்டு விதைகளை விதைக்க வேண்டும். சதுர முறையில் நடவுசெய்ய மார்க்கர் கருவி கொண்டு அடையாளமிடவேண்டும். சரியாக 10, 14 நாள் வயதுடைய இரு இலை பருவமுடைய இளநாற்றுகளை நடவுசெய்ய வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று மட்டுமே வைத்து மேலாக நடவுசெய்ய வேண் டும். 22.5 செமீ ஜ் 22.5 செமீ இடை வெளி (முக்கால் அடி இடைவெளி) இருக்குமாறு நடவுசெய்ய வேண்டும். நடவு செய்த 10ம் நாள் முதல் கோனோவீடர் களை எடுக்கும் கருவி கொண்டு 10 நாள் இடைவெளியில் 3 அல் லது 4 முறை களை எடுக்க வேண்டும். பாய்ச் சலும், காய்ச்சலுமாக நீர் பாசனம் செய்ய வேண் டும். இலை வண்ண அட்டை யை பயன்படுத்தி தேவைக்கேற்ப தழைச்சத்தை மேலு ரமாக பிரித்து இடவேண்டும்.

இவ்வாறு தொழில்நுட்பங் களை கடைபிடிக்கும்போது ஒரு ஏக்கரில் சராசரியாக 4,000 கிலோ வரை மகசூல் பெறமுடியும்.

**பெரம்பலூரில் ரூ.40 லட்சத்தில் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் விவசாயிகள் பயன்பெற அழைப்பு**

பெரம்பலூர்: பெரம்பலூரில் நடமாடும் மண் பரிசோதனை நிலையத்தை கலெக்டர் துவக்கி வைத்தார்.

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது வயலில் உள்ள மண்ணை பரிசோதனை செய்து அடையாள கையேட்டை உடனே பெற்றுக் கொள்ளும் வகையில் அரசு ரூ.40 லட்சம் மதிப்பிலான நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தை வழங்கியுள்ளது. இந்த வாகனத்தை பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அகமது துவக்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் அவர் பேசியதாவது:

புதிய நடமாடும் மண் பரிசோதனை வாகனம் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று ரூ.20 ஆய்வு கட்டணத்தில் மண் ஆய்வு செய்து முடிவுகள் மூலம் பயிருக்கு ஏற்ற சமச்சீர் உரப்பரிந்துரைகள் வழங்கப்பட உள்ளது.

அனைவருக்கும் நடமாடும் மண் பரி சோதனை நிலையத்தின் மூலம் மண்ணிலுள்ள பேரூட்ட சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துகளையும், மண்ணின் தன்மைகளான களர் மற்றும் உவர் தன்மையை அறிந்து அதற்கேற்ப பயிரிட்டு தேவையான உரங்களை இட்டு உரச்செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம்.

இவ்வாகனத்தில் மண்ணின் களர் மற்றும் அமில தன்மையை அறிய பி.எச் மீட்டரும், மண்ணிலுள்ள உப்பின் தன்மையை அறிய இ.சி.மீட்டரும் உள்ளது. மேலும் தழைச்சத்தை ஆர்கானிக் கார்பன் மூலம் ஆய்வு செய்து விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டு வருகிறது. நடமாடும் மண் பரிசோதனை

நிலைய வாகனம், தங்கள் கிராமங்களுக்கு வரும் விபரத்தை அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அல்லது வேளாண்மை உதவி இயக்குநர்களை பெரம்பலூர் 90470,72766, ஆலத்தூர் 90470,72764, வேப்பூர் 90470,72763, வேப்பந்தட்டை 90470,72768 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இந்த நடமாடும் மண் பரிசோதனை நிலையம் இன்று (6ம் தேதி) ஆலத்தூர் வட்டாரத்தில் நொச்சிகுளத்திலும், மேலமாத்தூரிலும், நாளை பெரம்பலூர் வட்டம் ஈச்சம்பட்டியிலும், வரும் 8ம் தேதி அம்மாபாளையத்திலும் அந்தந்த கிராமத்திற்கு வந்து மண் பரிசோதனை செய்ய உள்ளது.

இவ்வாறு கலெக்டர் கூறினார்.

மாநில வேளாண் விற்பனை வாரிய தலைவர் ரவிச்சந்திரன், பெரம்பலூர் எம்எல்ஏ தமிழ்செல்வன், மாவட்ட ஊராட்சிக்குழு துணை தலைவர் சேகர், ஒன்றியக்குழுத் தலைவர்கள் மருதைராஜ் (பெரம்பலூர்), கிருஷ்ணகுமார்(வேப்பூர்) நகர் மன்ற தலைவர் ரமேஷ், பெரம்பலூர் ஒன்றிய துணைத்தலைவர் பிச்சைப்பிள்ளை, வேளாண்மை இணை இயக்குநர் சங்கரலிங்கம், வேளாண்மை இணை இயக்குனர் (உழவர் பயிற்சி மையம்) ஆல்பர்ட், உதவி இயக்குநர் சேகர், வேளாண்மை அலுவலர்கள் (தரக்கட்டுப்பாடு) ராதாகிருஷ்ணன், ஸ்ரீபிரியா, நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் கண்ணன், ஜெயந்தி, செங்குட்டவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### குமரி மாவட்டத்தில் 20 ஆண்டுகளுக்குப் பின் தென்மேற்கு பருவமழை தீவிரம்

அருமனை: குமரியில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் தெற்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவகாற்று மூலம் குமரிக்கு போதிய அளவு மழை கிடைத்து வருகிறது. தென் மேற்கு பருவக்காற்று மூலம் ஜூன்,

ஜூலை, ஆகஸ்ட் மாதங்களைத் தாண்டி செப்டம்பர் வரை தொடர்ந்து மழை பெய்யும். கேரளாவிலும் இதே நிலைதான். வடகிழக்கு பருவமழை அக்டோபர், நவம்பர் மாதம் கனமழையாக பெய்யும். அப்போது வெள்ளப்பெருக்கு உட்பட பெரும் அழிவும் ஏற்படும் நிலை உள்ளது.

இந்நிலையில் குமரியில் கடந்த சில வருடங்களாக தென்மேற்கு பருவமழை பொய்த்துப்போனது. இதிலும் கடந்த இரு வருடங்களில் மழையின் அளவு மிகக்குறைவாகவே கிடைத்தது. இதனால் அணைகள், ஆறுகள், குளங்கள், நீரோடைகள் என ஏராளமான நீராதாரங்கள் வறண்டு, தண்ணீர் பஞ்சம் நிலவியது. மேலும் நெல், ரப்பர், தென்னை, வாழை உள்ளிட்ட பயிர்களும் பாதிப்பிற்குள்ளாகி விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர்.

இந்நிலையில் தற்போது யாரும் எதிர்பாராத விதமாக 20 வருடங்களுக்குப் பிறகு சரியாக ஜூன் மாதத்திலேயே தென்மேற்கு பருவமழை சீராக பெய்யத்தொடங்கியது. இது செப்டம்பர் வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை பொதுவாக பெரிய மழையாக இல்லாமல் சாரலாக இடைவெளி இல் லாமல் தொடர்ந்து பெய்யும், இடை இடையே சிறிதுநேரம் கனமழையும் காணப்படும். அத்துடன் குளிர், வாடைக்காற்று ஆகியவையும் இதன் சிறப்பாகும். மேலும் ரப்பர் உள்ளிட்ட மரக்கன்றுகள் நடவு இந்த சீசனில் நடக்கும். தொடர்ந்து அக்டோபர், நவம்பர் மாதம் கிடைக்கும் வடகிழக்கு பருவ மழை மூலம் பயிர்கள் வேகமாக வளர்ச்சியடையும். தற்போது பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் ரப்பர் பால் வடித்தல் தடைபட்டுள்ளது. இதனால் உற்பத்தி பாதிப்பும், வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. மேலும் கட்டுமானம், மரம் ஏறுதல், செங்கல் சூளை உள்ளிட்ட தொழில்களும் தடை பட்டு தொழி லாளர்கள் பலர் வேலை இழந்துள்ளனர். எனினும் குமரி மாவட்ட மக்களை பொறுத்தவரை 20 வருடங்களுக்குப் பின்னர்

சரியான முறையில் பெய்யும் தென்மேற்கு பருவமழையும், இதமான சூழலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**மேட்டூர் அணையில் இருந்து 1.20 லட்சம் கனஅடி நீர் திறப்பு தலைமை பொறியாளர் தகவல்**

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து 1.20 லட்சம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் கூறியுள்ளார். பொதுப்பணித்துறையின் திருச்சி மண்டல தலைமை பொறியாளர் பைந்தமிழ்ச்செல்வன் நேற்று மாலை மேட்டூர் அணையை பார்வையிட்டார். அப்போது, நீர் திறப்பு மற்றும் வரத்து குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர், அவர் நிருபர்களிடம் கூறியதாவது: மேட்டூர் அணை யின் நீர்மட்டம் 121 அடி யாக உயர்ந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 1 லட்சத்து 31 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஒரு லட்சத்து 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதில் ஜேடர்பாளையம் அணைக்கு 1 லட்சத்து 17 ஆயிரம் கன அடி தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. அங்கிருந்து கட்டளை கால்வாயில் வினாடிக்கு 80 ஆயிரம் கனஅடி தண்ணீர் செல்கிறது. முக்கொம்பில் வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் செல்கிறது. இதில், 25 ஆயிரம் கனஅடி காவிரியிலும், 25 ஆயிரம் கனஅடி கொள்ளிடத்திலும் விடப்படுகிறது.

கொள்ளிடத்தில் இருந்து கல்லணைக்கு வினாடிக்கு 7500 கனஅடியும், காவிரியில் 7500 கனஅடியும் மற்றும் கீழணைக்கும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கீழ ணையில் இருந்து வடவாரி கால்வாய் மூலம் இந்த தண்ணீர் வீராணம் ஏரிக்கு செல்கிறது. கர்நாடகத்தில் இருந்து வரும் நீரின் அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு நீர்வரத்து குறைந்தால், வெளியேற்றப்படும்

உபரிநீரின் அளவும் குறைக்கப்படும்.

இவ்வாறு பொதுப்பணித்துறையின் திருச்சி மண்டல தலைமை பொறியாளர் பைந்தமிழ்ச்செல்வன் கூறினார். பேட்டியின்போது கண்காணிப்பு பொறியாளர் குமரேசன், செயற்பொறியாளர் கந்தசாமி, உதவி செயற்பொறியாளர் கோவலன், உதவி பொறியாளர் சிங்காரவேலன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மழைநீர் சேகரிப்பு வலியுறுத்தி மாணவர்கள் பேரணி**

குளித்தலை: குளித் தலை அடுத்த மருதூர் பேரூராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் சம்பத் தலைமையேற்று பேரணியை தொடங்கி வைத்தார். செயல் அலுவலர் ரவிக்குமார், தலைமை ஆசிரியை கீதா முன்னிலை வகித்தனர். பள்ளி மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு அட்டையை ஏந்தி சென்றனர். கவுன்சிலர்கள் வக்கில் சக்திவேல், ரங்கராஜ், பாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வறட்சி நிவாரணம் வழங்க கோரி கோவில்பட்டியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

கோவில்பட்டி: வறட்சி நிவாரணம் வழங்காத விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க கோரி கோவில்பட்டியில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு வறட்சி நிவார ணம் வழங்க அறிவித்தும், இதுவரை நிவாரணம் பெறாத விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க வேண் டும். 2012,13ஆம் ஆண் டிற்கு பயிர் காப்பீட்டு தொகை வழங்க வேண்டும். ஊரக பணிகளை விவசாய பணிகளுடன் இணைக்க வேண்டும். விவசாய கடன் கள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண் டும். உழவர் அட்டை வழங்கப்படாத விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க வேண் டும். 60 வயதையடைந்து உழவர் அட்டை உள்ளவர் கள் அனைவருக்கும்

ஓய்வூதியம் வழங்க தமிழக அரசை வலியுறுத்தி கோவில்பட்டியில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

கோவில்பட்டி தாலுகா அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தாலுகா விவசாய சங்க செயலாளர் லெனின்குமார் தலைமை வகித்தார். விவ சாய சங்க தலைவர் சேதுராமலிங்கம் முன்னிலை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலா ளர் மோகன்ராஜ், மாநிலக் குழு உறுப்பினர் அழகுமுத்துப்பாண்டியன், முன்னாள் என்.எல்.ஏ.,க்கள் அய்யலுச்சாமி, ராஜேந்திரன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் பாலமுருகன், நல்லையா, மாவட்ட செயற் குழு உறுப்பினர் தமிழரசன் பேசினர்.

அருமைநாயகம், ராதாகிருஷ்ணன், பொன்னுச் சாமி, சங்கரலிங்கம், பாலசுப்பிரமணியன், எட்டயபுரம் தாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, வீராச் சாமி, சுப்பையா, வேல்முரு கன், ராமசாமி உட்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மழை காரணமாக வரத்து குறைவு வெங்காயம் விலை எகிறியது**



புதுடெல்லி: மழை காரணமாக வெளி மாநிலங்களில் இருந்து சப்ளை குறைந்ததால் வெங்காயம் விலை 50ஆக உயர்ந்துள்ளது. நாசிக் மற்றும் ராஜஸ்தானில் இருந்து வெங்காயம் மொத்தமாக டெல்லிக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது இந்த பகுதிகளில் பருவமழை பெய்துவருவதால் வெங்காய வரத்து வெகுவாக குறைந்துள்ளது. இதனால் மதர் பால்பண்ணை அருகே உள்ள சபால் பகுதியில்

மொத்த விற்பனையில், வெங்காயம் ஸி40க்கு விற்கப்படுகிறது. அதை வாங்கி வரும் சில்லரை வியாபாரிகள் கிலோ 50க்கு விற்று வருகின்றனர்.இதுபற்றி வெங்காய வியாபாரிகள் சங்க தலைவர் சுரேந்திரா புத்திராஜ் கூறியதாவது: ஆசாத்பூர் பகுதியில் கடந்த வாரம் 18-28 வரை ஒருகிலோவுக்கு விற்பனையான வெங்காயம், தற்போது கிலோ ஒன்றுக்கு 25-35 வரை விலை உயர்ந்துள்ளது.

பருவமழை காரணமாக லாசல்கோன் மற்றும் ராஜஸ்தானில் இருந்து வரும் வெங்காய லாரிகளின் வரத்து மிகவும் குறைந்துள்ளது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் இருந்து கிடைத்த தகவலின்படி, டெல்லி மற்றும் லாசல்கோன் பகுதிகளில் கடந்த ஒரு மாதத்தில் வெங்காயத்தின் விலை 50 சதவீதம் உயர்ந்துள்ளது. லாசல்கோன் மார்க்கெட்டில் ஜூலை முதல் வாரத்தில், கிலோ 16-17ஆக இருந்த வெங்காயத்தின் விலை கிடுகிடுவென 30க்கு எகிறியது. வெங்காய விளைச்சல் அதிகமாக்கப்பட்டு மார்க்கெட்டுக்கு அதிகமாக வந்தால் தான், விலை குறைய வாய்ப்பு உள்ளது.

அரசியல் ரீதியாக வெங்காய விலை உயர்வு என்பது ஆளும் கட்சியை மிகவும் பாதிப்படைய செய்யும் ஒரு வியாபார பொருள் ஆகும். ஏற்கனவே டெல்லிவாசிகள் தக்காளி, பயிர் வகைகள் மற்றும் தானிய வகைகளின் விலை உயர்வால் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர். தமிழ்நாடு மற்றும் ஆந்திராவில் வருகிற செப்டம்பர் மாதம் வெங்காய விளைச்சல் அதிகமாகும். இருந்தாலும், அக்டோபரில் தான் கர்நாடகாவில் வெங்கய விளைச்சல் அதிகரிக்கும். ஆகையால் அக்டோபருக்கு பிறகு தான் வெங்காயத்தின் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.08.2013**

**“2 ½ லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும்” கலெக்டர் நடராசன் தகவல்**

நீடாமங்கலம்,

மூணாறு தலைப்பில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப் பட்டது. இதன் மூலம் 2 ½ லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும் என்று கலெக்டர் நடராசன் கூறி னார்.

<u>கலெக்டர் நடராசன் தகவல்</u>

கர்நாடக மாநிலத்தில் தென் மேற்கு பருவ மழை தீவிர மடைந்ததால் அந்த மாநிலத் தில் உள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி உள்ளிட்ட முக்கிய அணைகள் வேகமாக நிறைந் தன. அந்த அணைகளுக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருந் ததை அடுத்து அணைகள் திறக்கப்பட்டு காவிரியில் தண் ணீர் விடப்பட்டது. இதை யடுத்து தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக வறண்டு கிடந்த மேட்டூர் அணையில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து முழு கொள்ளளவான 120 அடியை கடந்த 4–ந் தேதி எட்டியது.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் முழு கொள்ளளவு எட்டியதை தொடர்ந்து டெல்டா பகுதி சம்பா பாசனத்திற்காக அணை திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட மேட்டூர் அணை நீர் கல் லணையை வந்தடைந்தது. பின்னர் அங்கிருந்து திறந்து விடப்பட்ட காவிரி நீர் பெரிய வெண்ணாற்றின் மூலம் திரு வாரூர் மாவட்டம் நீடா மங்கலம் அருகே உள்ள மூணாறு தலைப்பிற்கு வந்த டைந்தது.

மூணாறு தலைப்பில் இருந்து நேற்று வேளாண் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதற்கான நிகழ்ச்சி மூணாறு தலைப்பில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச் சியில் மாவட்ட கலெக்டர் நடராசன் கலந்து கொண்டு, பாசனத்திற்கான தண்ணீரை திறந்து வைத்தார்.

பின்னர் கலெக்டர் நடராசன் நிருபர்களிடம் கூறியதாவது:–

2½ லட்சம் ஏக்கர் பயன் பெறும்

முதல்–அமைச்சர் ஜெய லலிதாவின் உத்தரவுப்படி மேட்டூர் அணையில் இருந்து கடந்த 2–ந் தேதி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீரானது, கல்லணைக்கு வந்து சேர்ந்து கல்லணையில் இருந்து மூணாறு தலைப்பிற்கு வந்த டைந்தது. இங்கிருந்து திரு வாரூர், நாகை மாவட்ட பாசனத்திற்காக வெண்ணாறு, கோரையாறு, பாமணியாறு ஆகிய ஆறுகள் வழியாக திறந்து விடப்பட்டுள்ளது. இதன்படி வெண்ணாற்றின் மூலம் 94 ஆயிரத்து 219 ஏக்கர், கோரையாறு மூலம் 1 லட்சத்து 20 ஆயிரத்து 957 ஏக்கர், பாமணி ஆற்றின் மூலம் 38 ஆயிரத்து 357 ஏக்கர் என 2 லட்சத்து 53 ஆயிரத்து 533 ஏக்கர் நிலம் பயன் பெறும்.

நீர் வரத்து நிலவரம்

நேற்று காலை நிலவரப்படி கல்லணையில் இருந்து பெரிய வெண்ணாற்றின் மூலம் கோரையாறு தலைப்பிற்கு 642 கன அடி நீர் வந்துள்ளது. இங்கிருந்து 234 கன அடி நீர் வெண்ணாற்றிலும், 91 கன அடி கோரையாற்றிலும், 317 கன அடி பாமணி ஆற்றிலும் பிரித்து விடப்பட்டுளது. நீர் வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. 2 ஆயிரம் கன அடி வரை மூணாறு தலைப் பிற்கு நீர் வரும் பட்சத்தில் வெண்ணாற்றில் 600 கன அடி நீரும், பாமணி ஆற்றில் 400 கன அடி நீரும், கோரையாற்றில் ஆயிரம் கன அடி நீரும் பிரித்து விடப்படும்.

கவனம் தேவை

ஆறுகளில் வெள்ளம் ஓட் டம் அதிகம் உள்ள காலத்தில் கரையோரம் வசிக்கும் மக்கள் ஆறுகளில் இறங்கக்கூடாது. தாழ்வான பகுதிகளில் உள்ள வர்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வரு வாய் அலுவலர் மணிமாறன், மன்னார்குடி உதவி கலெக்டர் ராஜேஸ்வரி, பொதுப் பணித் துறை வெண்ணாறு வடிநிலக் கோட்ட செயற் பொறியாளர் ஆர்.குண சேகரன், நிர்வாக பொறியாளர் ரவிச்சந்திரன், தாசில்தார் காளேஸ்வரன், ஒன்றியக்குழு தலைவர் ராஜேந்திரன், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் சங்கர், நீடாமங்கலம் உதவி செயற்பொறியாளர் சி.குண சேகரன், ஒன்றிய ஆணையர் வெங்கடேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நிலத்தடி நீரை பாதுகாக்கும் நீர்மூழ்கி தடுப்பணைகளால் எதிர்கால விவசாயம் பலன் பெறும் திருவாரூர் கலெக்டர் நடராசன் பேச்சு**

வலங்கைமான்,

நிலத்தடி நீரை பாது காக்கும் நீர்மூழ்கி தடுப் பணைகளால் எதிர்கால விவசாயம் பலன் பெறும் என்று திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் கூறினார்.

நீர்மூழ்கி தடுப்பணை

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானை அடுத்த வீராணம் அருகே உள்ள வெட் டாறு விவசாய நிலங்களுக்கு பலன் அளிக்கும் முக்கிய ஆறு களில் ஒன்றாகும். இந்த ஆற் றில் வெள்ள ஓட்டம் அதி கமாகும்போது கடலில் வீணாக கலக்கும் நீரை சேமிக் கும் வகையில் நீர்மூழ்கி தடுப் பணை அமைக்க திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் நடவடிக்கை எடுத்தார். அதைதொடர்ந்து ஆற்றின் குறுக்கே பள்ளம் தோண்டப் பட்டு மணல் மூட்டைகளை அடுக்கி தடுப்பணை அமைக் கும் பணிகள் நடைபெற்றன. இந்த பணிகள் நிறைவு பெற் றதைதொடர்ந்து வெட்டாற் றில் பூமி பூஜை நடந்தது. இதில் திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் கலந்து

கொண்டு, நீர்மூழ்கி தடுப்பணை அமைக் கும் பணிகளை முடித்து வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறியதா வது:-

பலன் அளிக்கும்

வலங்கைமான் அருகே வீராணம் பகுதி வெட்டாற்றில் 98 ஆயிரம் மணல் மூட்டை களை அடுக்கி நீர்மூழ்கி தடுப்பணை அமைக்கப்பட் டுள்ளது. ரூ. 13லு லட்சம் மதிப்பில் 60 மீட்டர் நீளம் 11லு மீட்டர் அகலத்தில் 15 அடி ஆழத்தில் அமைக்கப்பட் டுள்ள இந்த நீர்மூழ்கி தடுப் பணை நிலத்தடி நீர் ஆதா ரத்தை சேமிப்பதற்கும், குடிநீர் உப்புநீராக மாறுவதை தடுப் பதற்கும் உதவும்.

திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலம், குடவாசல், திருத்துறைபூண்டி ஒன்றியங் களில் இதே போல் தடுப் பணைகள் அமைக்கப்பட் டுள்ளன. 5-வதாக வலங்கை மான் அருகே வீராணம் பகுதி வெட்டாற்றில் நீர்மூழ்கி தடுப்பணை அமைக்கப்பட் டுள்ளது. இந்த தடுப்பணை 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு நிலத்தடி நீர் ஆதாரத்தை பலப்படுத்தும் திறன் கொண்டது. நிலத்தடி நீரை பாதுகாக்கும் நீர்மூழ்கி தடுப் பணைகள் எதிர்கால விவ சாயத்திற்கு பலன் அளிக்கும்.

மாநிலம் தாண்டிய வரவேற்பு

கர்நாடக மாநிலம் பெங்களூ ருவில் உள்ள மண் ஆய்வு நிலைய ஆய்வாளர்கள் திரு வாரூர் மாவட்டத்தில் அமைக் கப்படும் நீர்மூழ்கி தடுப் பணைகள் பற்றி தகவல் அறிந்து தடுப்பணைகள் பற்றி ஆய்வு செய்துள்ளனர். இது மாநிலம் தாண்டி மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. இதற்கான தொடர் நடவடிக் கையாக வரும் ஆண்டில் திரு வாரூர் மாவட்டத்தில் ஏனைய அனைத்து பாசன வடிகால் ஆறுகளிலும் அதிக அளவி லான நீர் மூழ்கி தடுப்பணை கட்டுவதற்கு முதல்-அமைச்ச ரின் ஒப்புதல் பெற்று நட வடிக்கை மேற்கொள்ளப் படும்.

இவ்வாறு கலெக்டர் கூறி னார்.

வலங்கைமான் தாசில்தார் சுகுமாறன், ஒன்றியக்குழு தலைவர் பரமேஸ்வரி ராஜ மாணிக்கம், ஊராட்சி மன்ற தலைவர்கள் சங்கர், மாலதி துரை, ஒன்றிய ஆணையர்கள் ஜீவானந்தம், தில்லை நட ராஜன், ஒன்றிய பொறியாளர் ரவிச்சந்திரன், துணை வட் டார வளர்ச்சி அலுவலர் புஷ்பநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**புதுவையில் திடீர் மழை**

புதுச்சேரி

புதுச்சேரியில் கடந்த சில நாட்களாக பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக புதுச்சேரியில் சீதோஷ்ண நிலை மாற்றம் அடைந்துள்ளது. பகலில் வெயில் அடித்தாலும் மாலையில் குளிர்ந்த காற்று வீசியது. நேற்று பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. மாலை 4 மணிக்கு மேல் வானில் கருமேகங்கள் சூழ்ந்தன. 5 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை சுமார் 30 நிமிடம் கொட்டி தீர்த்தது. தொடர்ந்து இரவு 10 மணிக்கு மீண்டும் மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியது. அப்போது சாலைகளில் சென்ற வாகனங்கள் மழைநீரில் மிதந்தபடி சென்றன. இந்த தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

**ஜூலை மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 36 சதவீதம் சரிவு**

கொல்கத்தா

ஜூலை மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 36.4 சதவீதம் சரிவடைந்து 1.07 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது 2012 ஜூலை மாதத்தில் 1.68 லட்சம் டன்னாக இருந்தது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் (ஏப்ரல்–ஜூலை) சோயா புண்ணாக்கு ஏற்றுமதி சரிவடைந்துள்ளது. சென்ற ஆண்டின் இதே மாதங்களுடன்

ஒப்பிடும்போது 37.1 சதவீதம் சரிந்து 8.24 லட்சம் டன்னிலிருந்து 5.18 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. 2012 அக்டோபர் முதல் ஜூலை வரையிலான காலத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 13.7 சதவீதம் சரிந்து 36.10 லட்சம் டன்னிலிருந்து 31.15 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இந்த புள்ளி விவரங்களை சோயாபீன் பதப்படுத்துவோர் சங்கம் வெளியிட்டுள்ளது.

நம்நாட்டிலிருந்து ஜப்பான், வியட்நாம், தாய்லாந்து, ஈரான் ஆகிய நாடுகள் அதிக அளவில் சோயா புண்ணாக்கை இறக்குமதி செய்து வருகின்றன. எண்ணெய் வித்துகளிலிருந்து எண்ணெய் எடுத்த பின் கிடைக்கும் புண்ணாக்கு கால்நடை தீவனமாகவும், விளைநிலங்களில் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.